[1987 ஏப்ரல் 25

வாணியம்பாடி வட்டம், புல்லூரில் பாலாற்றில் அணைக்கட்டு.

511—(*வினா எண் 9617) திரு. எஸ். பி. மணவாளன் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வாணியம்பாடி வட்டம் புல்லூர் அருகில் பாலாற்றின் குறுக்கே அணைகட்டும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடி வட்டம் பாலாற்றின் குறுக்கே ஒரு நீர் நிரப்பு நீர்த் தேக்கம் அமைப்பது பற்றிய கருத்துரு ஒன்று வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவருடன் தொடர்பு கொண்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எஸ். பி. மணவாளன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியின் விவசாயப் பெருங்குடி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கை இது. சுமார் 30 வருடங்களாக அந்தப் பகுதி மக்கள் பாலாற்றின் குறுக்கே அணை கட்ட வேண்டுமென்று கோரி வருகிறார்கள். இதிலே காலதாமதம் ஏற்படுவதற்குக் காரணம் என்ன ? மேற்கொண்டு எப்போது பரிசீலனை முடியும்? எப்போது இந்த திட்டத்திற்கு ஒப்புதல் அளிப்பார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலாறு சமமான பகுதியில் பாயும் ஆறு என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும். அணை கட்டும் பகுதி மிகவும் குறைவாக இருக்கிறது. பாலாற்றில் மிகப் பெரிய அணை ஏதுமில்லை. மாண்புமிகு உறுப்பினர் சொல்லிய இடத்திலே கட்ட வேண்டும் என்றால் சுமார் 192 ஏக்கர் நிலப் பரப்பு ஆந்திர மாநில நிலம் நீரில் மூழ்க வேண்டிய நிலை இருப்பதால் நீண்ட காலமாக ஆந்திரப் பிரதேச மாநில அரசோடு பேசி பார்க்கும் போது, எங்கள் பகுதி நீரில் மூழ்கக் கூடாது, உங்கள் பகுதியில் வேண்டுமானால் அணையைக் கட்டலாம் என்று சொல்லி இந்த திட்டத்தை நிராகரித்திருக்கிறார்கள். நம்முடைய பகுதியில் இந்த அணையைக் கட்டும் போது ஏறத்தாழ ஒரு டி.எம்.சி. தண்ணீரை தேக்கி வைக்கும் வாய்ப்பு இருக்கிறது. இந்த நீர்த்தேக்க திட்டத்தின் மூலமாக நேரிடையாக விவசாயத்திற்கு பாசனம் செய்ய முடியாது. கிரவுண்டு வாட்டர் டெவலப்மெண்ட் செய்யப்படுகிற திட்டத்திற்காக அரசாங்கம் முனைப்பான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

திரு. எஸ். பி. மணவாளன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லியது போல நிலத்தடி நீரை அதிகப்படுத்தும் திட்டம்தான் இது. இதனால் பாலாற்றின்

1987 ஏப்ரல் 25]

அருகில் உள்ள பல நகரங்களுக்குக் குடிநீர் திட்டம் தடையின்றி செயல்படவும், அதே நேரத்திலே அந்தப் பகுதியினுடைய விவசாயப் பெருங்குடி மக்களுடைய தேவைக்காக கிணறுகளிலே நிலத்தடி நீரை அதிகமாகப் பெறுவதற்குமான காரணத்தைக்கொண்டும், வட ஆற்காடு மாவட்டத்தின் முக்கியத்துவத்தைக் கருதி, மாண்புமிகு அமைச்சரவர்களும், மாண்புமிகு முதலமைச்சரவர்களும் ஆந்திர அரசோடு நேரடியாக இது பற்றிப் பேசி, அந்த நீர்த்தேக்கத்தில் தேங்குகின்ற தண்ணீர் பகுதியைக் கேட்டு, அந்த உரிமையைப் பெற ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினுடைய முக்கியத்துவம் அரசுக்குத் தெரியாமல் இல்லை. நாங்கள் பேசவும் தயாராக இருக்கிறோம். பல ஆண்டுகளாகப் பேசியிருக்கிறார்கள். எத்தனை தரம் பேசினாலும் அவர்கள் இடங்களை விடத் தயாராக இல்லை. ஆந்திரா மட்டும் அல்ல, எந்த மாநில அரசும் விடத் தயாராக இல்லை. முயற்சி மேற்கொள்வதில் தவறில்லை. வேண்டிய முயற்சிகள் மேற்கொள்ளப் படும்.

திரு. என். சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலாறு மேல் புறத்திலே எந்த அணைக்கட்டு கட்டுவதாக இருந்தாலும், கீழேயுள்ள ஆயக்கட்டுதாரர்களுடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டு அரசு செயல்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மேலே அணை கட்டுவதால் கீழே இருக்கிற விவசாயிகள் பாதிக்கப் படுவதில்லை. பாலாற்றிலே வருஷத்திலே 10, 15 நாட்கள்தான் தண்ணீர் வருகிறது. வருகிற தண்ணீரும் அப்படியே ஆற்றுக்குள் போய்விடுகிறது. எப்படியாவது அங்கே நாம் செக்-டாம் அல்லது பெரிய டாம் போட்டு, கிரவுண்டு வாட்டரை டெவலப் செய்ய வேண்டும். பாலாறு மணற் பாங்கு அதிகமாக உள்ள ஆறு என்ற காரணத்தால் நாம் டேம் கட்டவில்லை என்றால் வெய்யில் காலத்திலே மணல் வழியாக தண்ணீர் அடிப்பாகத்திற்குப் போகுமே ஒழிய, கீழே இருக்கிற ஆயக்கட்டுதாரர்களைப் பாதிக்காது.

திரு. கே. பாலாஜி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பாலாற்றிலே அணை கட்டுவது பாசனத்திற்கு பயனுள்ளதாக இராது என்று சொன்னார்கள். ஆனால் பாலாற்றுக்கு அருகாமையிலே உள்ள கர்நாடக மாநிலத்திலிருந்து இதற்கு முன்னால் ஆண்டுக்கு ஒரு முறை தண்ணீர் விட்டார்கள். இப்போது 6, 7 ஆண்டுகளுக்கு ஒரு முறை கூட தண்ணீர் விடுவதில்லை. எப்படி தஞ்சைக்கு காவிரியில் தண்ணீர் விடுகிறார்களோ அதைப் போல இதற்கும் விட வேண்டும்.

[1987 ஏப்ரல் 25

அவர் சொன்னதுபோல், அணை கட்டுவதில் இலாபம் இல்லை என்றாலும், வட ஆற்காடு மாவட்டத்திலும், செங்கற்பட்டு மாவட்டத்திலும் பல நூறு ஏரிகள் அந்த ஆற்றிலே தண்ணீர் வரும்போது, நிரம்புகின்றன. அப்படி நிரம்பும்போது இலட்சக் கணக்கான ஏக்கர் நிலங்கள் அதனால் பயனடைகின்றன. ஆகவே தயவு செய்து ஆண்டுக்கு ஒரு முறை அந்த ஆற்றிலே தண்ணீர் விடவும், தேவைப் பட்ட இடத்திலே 3 அடி உயரத்திற்கு தடுப்புச் சுவர்கள் கட்டி, நீரைத் தேக்கிடவும் மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த ஆண்டு ஏற்பாடு செய்வார்களா என்பதை தலைவரவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, நமக்கிருக்கிற துரதிருஷ்டமெல்லாம் கர்நாடகத்திலிருந்துதான் நம்முடைய பகுதிக்குத் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. கடந்த 10 ஆண்டுகளாக அங்கே உள்ள கண்மாய்களுக்கு அந்தத் தண்ணீரை திருப்பிவிட்டிருப்பதாகத் தகவல் உள்ளது. இருந்தாலும் வெள்ள நேரங்களில் முழுவதையும் பயன்படுத்த முயற்சிகளை எடுக்க வேண்டுமென்ற உணர்வை பொதுப் பணித் துறை அதிகாரிகளுக்குச் சொல்லி இருக்கிறோம்.

சோழகம்பட்டி, அய்யனாபுரம் வாரிகளில் அணை கட்டுதல்.

512—(*வினா எண். 12257) திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை, திருச்சி மாவட்டங்களில் பெய்கின்ற மழை தண்ணீரை சோழகம்பட்டி, அய்யனாபுரம் வாரிகளில் அணை கட்டி தடுத்து தஞ்சை மாவட்டம் செங்கிப்பட்டி பகுதிக்கு பாசனத்திற்கு பயன்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டம் ஏதும் ஆய்வில் இல்லை.

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சுருக்கமாக இப்படிப்பட்ட திட்டம் ஆய்வில் இல்லை என்று சொன்னதற்கு வருத்தத்தோடு நன்றியை சொல்ல வேண்டும். காரணம் புதுக்கோட்டை, திருச்சி மாவட்டங்களிலே பெய்கிற மழை செங்கிப்பட்டி வழியாக சோழகம்பட்டி, அய்யனாபுரம் பகுதிகளில் காட்டாறு வழியாக, வந்து, அந்தத் தண்ணீர் காவிரி ஆற்றிலே மழைக் காலங்களிலே போய்ச் சேருகிறது. அப்போது ஏற்படும் வெள்ளப் பெருக்கால் செய்திருக்கிற விவசாயம் பாதிக்கப்படுவதால், அந்தப் பகுதிகளிலே இப்படிப்பட்ட அணைகளைக் கட்டி ஆயிரக் கணக்கான ஏக்கர்களுக்கு பாசனம் தேடும் வகையிலும், ஏரி குளங்களை வெட்டி கிரவுண்ட் வாட்டரை சேமிக்கும் வகையிலும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.